**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 150/ 2023** Date: 06.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 5** |
| Name | : | நவாஷ், காவல் ஆய்வாளர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 06.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 27.05.2022 ம் தேதி நான் தருமபுரி நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்தபோது காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அண்ணாதுரை என்பவர் நிலையம் பொறுப்பில் இருந்தபோது தருமபுரி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனின் பேரில் உள்நோயாளியாக இருந்து தருமபுரி செந்தில் நகர், செல்வகணபதி தெருவை சேர்ந்த ரவி என்பவரது மனைவி லில்லிஎமல்டா என்பவரை விசாரிக்க சென்றபோது அவர் மயக்கநிலையில் இருந்ததால் அவரது மகனான அலெக்சாண்டர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண். 345/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் வாக்குமூலத்தையும் இணைத்து நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். சிகிச்சையிலிருந்த லில்லிஎமல்டா என்பவர் 27.05.2022 ம் தேதி22.05 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற இண்டிமேசனின் பேரில் வழக்கின் சட்டப்பிரிவினை இதச 279, 337 லிருந்து 279, 304(A) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.**

2. சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அண்ணாதுரை வழக்கின் ஆவணங்களை என் பார்வைத்து வைத்ததை நான் என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு

28.05.2022 ம் தேதி காலை 7.00 மணிக்கு சென்று சாட்சிகள் சுப்பிரமணி, தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்.** பின்னர் சம்பவஇட சாட்சிகள் அலெக்சாண்டர், தமிழரசன், சுப்பிரமணி, தியாகராஜன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

3. விபத்தில் இறந்த லில்லிஎமல்டா என்பவரின் பிரேதத்தின் மீது தருமபுரி அரசு மருத்துவமனை 28.05.2022 ம் தேதி காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.** பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 29 N 2900 Ashok Leyland பேருந்தையும், TN 29 AP 2030 TVS Pep Plus இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்விற்காக அனுப்பிவைத்தேன். இறப்பின் உண்ணைமயான காரணம் அறியும் பொறுட்டு பிரேதத்தை காவலர் 932, திரு.S.முனுசாமி என்பவர் மூலம் சவக்கிடங்கிற்கு அனுப்பிவைத்தேன். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஆய்வுசெய்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. G. ராஜ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து, TN 29 N 2900 Ashok Leyland பேருந்து மற்றும் TN 29 AP 2030 TVS Pep Plus இருசக்கர வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றேன். **TN 29 N 2900 Ashok Leyland பேருந்து மற்றும் TN 29 AP 2030 TVS Pep Plus இருசக்கர வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.8,9 ஆகும்.**

4. காயம்பட்ட லில்லிஎமல்டா என்பவருக்கு முதலுதவி சிகிச்சை செய்த அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ராஜசேகர் மற்றும் இறப்பு இண்டிமேசன் வழங்கிய மருத்துவர் திரு.செல்வம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து லில்லிஎமல்டா என்பவரின் விபத்து பதிவேட்டு சான்று பெற்றேன். **லில்லிஎமல்டா என்பவரின் விபத்து பதிவேட்டுசான்று அ.சா.ஆ.10 ஆகும்.** லில்லிஎமல்டாவின் பிரேதத்தின் மீது உடற்கூராய்வு செய்த மருத்துவர் மதன்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து உடற்கூராய்வு சான்று பெற்றேன். **லில்லிஎமல்டாவின் உடற்கூராய்வு சான்று அ.சா.ஆ.11 ஆகும்.** இவ்வழக்கின் பிரேதத்தை உடற்கூராய்விற்கு எடுத்து சென்ற முதல்நிலை காவலர் 931, திரு.முனுசாமி என்பவரையும், வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அண்ணாதுரை என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கின் எதிரியான வெங்கடாசலம் 31.05.2022 ம் தேதி நிலையம் ஆஜரானவரை கைதுசெய்து நிலைய பிணையில் விடுவித்தேன். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 09.08.2022 ம் தேதி சட்டப்பிரிவு 279, 304(A) இதசவாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடந்த இடத்திற்கும் பாரதிபுரம் பேருந்து நிறுத்தத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டர் இருக்கும். சேலத்திலிருந்து வரும்போது

பாரதிபுரம் பேருந்து நிறுத்தம் தாண்டி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சேலத்திலிருந்து தருமபுரி வரும் பேருந்துகள் பாரதிபுரம் பேருந்து நிறுத்தத்தில் நின்று தான் செல்லும் என்றால் சரிதான், பயணிகள் இருக்கும் பட்சத்தில் நிறுத்தி செல்லும். விபத்தில் இறந்துபோன நபர் பாரதிபுரம் டிப்போ அலுவலகத்திலிருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையை கடந்தார். எதிரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தனது வாகனத்தை இயக்கினார்.

2. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனத்தின் முன்பக்க பாகங்கள் மட்டும் சேதமானது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாகனத்தின் பின்பக்கத்திலும் சேதம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இருசக்கர வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் மையப்பகுதியில் இருக்கும் பட்சத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற பேருந்து மோதினால் இருசக்கர வாகனத்தில் பின் பக்கம் அதிகம் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் விபத்தின்போது நான் சொல்வதுபோல் சாலையின் மையப்பகுதியில் இருக்கவில்லை என்றும், பேருந்து வருவதை கவனிக்காமல் சாலையை கடந்ததால் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

3. எதிரி தனது வாகனத்தை பாரதிபுரம் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டு மெதுவாகத்தான் இயக்கினார் என்றும், இறந்த நபரின் கவனக்குறைவால் விபத்தானதுஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபருக்கு ஓட்டுனர் உரிமமோ, காப்பீடு சான்றிதழோ இல்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் தலைக்கவசம் அணியாமல் இருந்தார் என்றால் அதுகுறித்து தெரியவில்லை. நான் சம்பவ இடம் சென்று முறையாக விசாரணை மேற்கொள்ளாததால் தான் சம்பவ இடத்தில் தலைக்கவசம் இருந்ததா என எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

4. விபத்தானது இருசக்கர வாகன ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், இழப்பீடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்த நபர் போக்குவரத்து துறை அலுவலகத்தில் பணிபுரிந்த நபர் என்பதால் இழப்பீடு பெறவேண்டி எதிரி மீது தவறாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில், விதத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றும், வழக்காவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.06 17:43:51 +0530